# ஆனந்த யோகம்



பாலகுமாரன்

# ஆனந்த யோகம்

அனுப்பி கட்டிய மண்டபத் தூணில் தாயுமானவர் அயர்ந்து உட்கார, கண்மூடி வெறுமே கிடக்க, யாரோ அருகே நிற்பது போல் உணர்ந்தார்.

கண்திறக்க எதிரே யோகீஸ்வரர் நின்றிருந்தார். மெல்ல தாயுமானவரின் தலை வருடி ஆசீர்வதித்தார். பிடரியை நீவி விட்டார்.

தனது வலக்கையால் தாயுமானவரின் கழுத்து, தோள்கள், புஜம், மார்பு எல்லாம் வருடிக் கொடுத்தார். விரல்களைச் சிறிது நேரம் கோர்த்துக் கொண்டார்.

தாயுமானவருக்கு வினோதமான உணர்வு ஏற்பட்டது. அவர் உடம்பு அவருக்கு அன்னியமாயிற்று. அவர் மனம் அவர் உடம்பை வேடிக்கைப் பார்த்தது.

அவர் அவருடைய மனதை வேடிக்கைப் பார்த்தார். மனம் பார்ப்பதை நிறுத்தியது. அவரும் பார்ப்பதை நிறுத்தினார்.

மனம். உள்மனம் இரண்டும் வெளிற சடேரென்று ஆழமான வெறுமை தோன்றியது. அந்த வெறுமை வெளிச்சமாக இருந்தது.

வெளிச்சத்தில் வெளிச்சமாய் கலந்தபோது எதுவும் செய்யத் தோன்றவில்லை. எந்தச் சிந்தனையும் எழவில்லை.

மிக நிறைவான முழுமையான சந்தோஷம் தன்னைக் கேட்காமலேயே தன்னைக் கவ்விக் கொண்டதை உணர்ந்தார்.

அந்த சந்தோஷம்தான் அது. அதுதான் அவர். காலக்கணக்கு தப்பியது. நேரம் நினைவில் பதியாமல் போனது. இருட்டி வெகு நேரமான பிறகு யாரோ உலுக்க எழுந்தார்.

மறுபடி அந்த மண்டபத்துக்குப் போனார். அந்த யோகீஸ்வரர் இருப்பாரோ என்று தேடினார். அந்த யோகீஸ்வரர் அங்கு இல்லை.

அவரைத் தேடுகிறாயா.. அவரைத் தேடிக் கண்டுபிடித்துவிட முடியுமா. அவர் பெரிய சித்தரப்பா. சித்தன் போக்கு சிவன் போக்கு. அது வரும். போகும்.

அவர் யார்? அவர் பெயரென்ன?

அவர் பெயர் மௌன குரு. உனக்கு உபதேசமாயிற்றா. உன் முகத்தின் தெளிவு சொல்கிறதே.

சும்மா இரு என்று சொன்னார்.

அடடா.. இதைவிட உபதேசம் உண்டா, யானை உட்கார்ந்தது போன்ற விஷயமல்லவா இது.

யானை உட்கார்ந்ததா... அப்படியென்றால்...

நிற்கிற யானைக்கு எத்தனை ஆட்டம். எவ்வளவு சேஷ்டைகள். யானை உட்கார்ந்தால் சேஷ்டைகள் குறையும். ஆனால் யானை உட்காருவது மிக அபூர்வம்.

அப்படியானால் யானை படுப்பதும் உண்டோ?

உண்டே...

என்ன அது...?

சொன்னால் புரியாது. உணர்.

ஐயா, நீங்கள் யார்..?

திருமூலர் மரபில் வந்த மிகப் பெரிய குருவைத் தெரிந்து கொண்டாய். இனி என்னைத் தெரிந்து என்ன ஆகப்போகிறது.

உன் குரு உன் குதிரை மீது ஏற்றி உன்னை உட்கார வைத்து விட்டார். நான் அதை மெல்ல ஓடுவதற்காகத் தட்டிவிட்டேன். நீ பயணம் செய்.

ஆன்மீகத்தில் பயணம் என்பது இடைவிடாத விசாரம். இடைவிடா விசாரம் என்பது எல்லா நேரமும் தன்னையே பார்த்திருத்தல்.

சும்மா இரு என்பதற்கு அர்த்தம் எந்தக் காரியமும் செய்யாமலிருப்பது அல்ல. உலகக் காரியத்தில் ஈடுபட்டு உன்னையே பார்த்துக் கொண்டிருத்தல்.

உன் ஆசை அபிலாஷைகள் உன்னை என்ன செய்து கொண்டிருக்கின்றன என்று கவனித்தபடி இருத்தல்.

உன் கோபத்தை, உன் காமத்தை, உன் கவலையை, உன் கர்வத்தை அவை எழும் போதே இனம் கண்டு கொள்ளல். எல்லா எண்ணங்களையும் அவை தூண்டும்போதே புனிதப்படுத்தல்.

இதைச் செய்து வா, போதும். இதுதான் ஆன்மீகம். இதுதான் எல்லா மதமும் சொல்லும் இறை வழி. இதுதான் உண்மையான பூஜை. இதுதான் மிகப்பெரிய யாகம். இதுவே தவம்.

தவம் செய். மற்றவை தானே நடக்கும்.

அவர் சொல்லச் சொல்ல உண்மை நெஞ்சில் பட்டு மாபெரும் திகைப்பு கேட்டது.

இது எல்லோருக்கும் கிடைக்காது. கிடைத்தாலும் எல்லோருக்கும் புரியாது.

இறைவழி பற்றி எப்போதோ ஒருமுறைதான் கேட்கக் கிடைக்கும். கிடைத்தவுடன் பற்றிக் கொள்ள வேண்டும். விட்டால் போயிற்று.

உலக வாழ்க்கையில் நாட்டம் அதிகமாகி முக்கியமில்லாதவையெல்லாம் முக்கியமாகி மிகப்பெரிய பக்திமான் போல வேடந்தாங்கி வலம் வரத் தூண்டும்.

இந்த வழிக்கு வந்த பிறகு மிக மிக கவனமாய் இருக்க வேண்டும்.

என்னைப் பார்க்க எனக்குத் தெரிந்து விட்டது. இனி தொடர்ந்து பார்க்க வேண்டும்.

என் அகக்கண் திறந்த குருவே போற்றி. என் தாயே போற்றி. திருமூலர் மரபில் வந்த மௌன குருவே போற்றி.

நீ இன்றி நான் இல்லை. நீ எங்கிருப்பினும் உன் பாத கமலத்தை நெஞ்சில் நிறுத்தி வலம் வருவேன்.

மறுபடி நீ என்னோடு கூடிக் களிக்கும் காலத்தை எதிர்பார்த்து உள்ளே கனிந்து அமர்ந்திருப்பேன். நீ கூப்பிடும் குரலுக்கு செவிமடுத்துக் காத்திருப்பேன்.

உன்னை என்னுள் இருத்தி இமைக்காமல் பார்த்திருப்பேன்.

தாயே போற்றி
என் தந்தையே போற்றி
என் சிவனே போற்றி
திருமூலர் மரபில் வந்த மௌன குருவே போற்றி.

அவர் இடைவிடாது உள்ளே கை கூப்பித் தொழுதார்.